வாசிக்க: 1 தெசலோனிக்கேயர் 2:1-12

***"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்" (1 கொரி 11:1)***

முன்மாதிரியற்ற மார்க்கத்தலைவரைக்குறித்து இயேசு மக்களை இவ்விதம் எச்சரித்தார்: "அவர்கள் உங்களுக்குச் சொல்கிற யாவையும் கடைப்பிடியுங்கள்; ஆனால் அவர்கள் செய்வதுபோல் நீங்கள் செய்யாதிருங்கள்" (மத் 23:3). மாறாக, பவுல் விடும் சவாலைக் கேளுங்கள்: "நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாகி... என்னிடம் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ அவைகளையே செய்யுங்கள்" (பிலி 3:17; 4:9).

"கடவுளைப் பின்பற்றுங்கள்" எனத் திருமறை நமக்குப் போதிக்கிறது (எபே 5:1). "என் பின்னே வாருங்கள்" என இயேசு தமது சீடரை அழைத்தார் (மத் 4:19). அடுத்து மூன்றாம் நிலை: "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்" எனப் பவுல் தனது விசுவாசிகளை ஊக்குவித்தார் (1 கொரி 11:1).

இப்படிச் சொல்வதால், நாம் பின்பற்றுவதற்குப் 'பூரணமான' தலைவர்களைத் தேடிச் செல்லவேண்டுமென்று பொருளல்ல. பின்பற்ற விரும்பும் தலைவனைக் குறித்துக் கீழ்வரும் கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள்: அவன் திருமறையின் அதிகாரத்திற்கு அடிபணிந்தவனா? அவன் ஜெப மனிதனா? அவன் எதிர்ப்பால ருடன் பழகும்போது எட்டி நிற்கிறானா? அவன் எளிய வாழ்க்கை நடத்துகிறானா? அவன் உண்மையுள்ளவனா? அவன் புகழுக்கும், தன்னலத்திற்கும் செத்தவனா? அனைத்து விசுவாசிகளையும் அணைத்துக்கொண்டு ஒற்றுமைக்காய்ப் பாடுபடு கிறவனா? அகிலவுலக நற்செய்திப்பணிக்காய்த் தாகங்கொண்டவனா? அடுத்த வரிசைத் தலைவர்கைளைப் பயிற்றுவிக்கிறவனா? மெச்சத்தகும் இப்பண்புகள் நிறைந்துள்ள ஒரு தலைவனைப் பின்பற்றுவது பொதுவாகப் பாதுகாப்பானதாகும்.

ஒவ்வொரு தலைவனுக்கும் பலங்களும், பலக்குறைவுகளும் உண்டு. பன்மைத் தலைமைத்துவத்தை புதிய ஏற்பாடு வலியுறுத்துவதற்கு இது ஒரு காரணமென்பது எனது கருத்து (தீத் 1:5; அப் 20:17). இதனால் ஏதோ ஒரு நபரைக் கதாநாயக வணக்கம் செய்தலும் தவிர்க்கப்படுகிறது. துர்ப்பாக்கியமாக இன்று பின்பற்று வோரைவிட 'விசிறிகளும்,' சீடரைவிடப் 'பக்தகோடிகளுமே' அதிகம். ஒரு தலை வனைப் பின்பற்றுவதென்றால் அவனது பிரசங்க மற்றும் ஊழியப்பாணியைக் காப்பியடிப்பதல்ல. பிரசங்க மேடையில் ஒருவர் செய்வதை எளிதில் காப்பியடித்து விடலாம். தலைவனின் ஜெப அறை மற்றும் தியான ஆராய்ச்சிப் பயிற்சிகளைக் கற்றுக்கொள்வதே முக்கியம். மற்றபடி நாம் "தண்ணீரற்ற மேகங்கள்" ஆகிவிடுவோம்.

தலைவன் பின்வாங்கினால் அவனைப் பின்பற்றுவோரின் இதயக்காயம் பெரிதாயிருக்கும். ஆனால் அவன் பிரசங்கித்தவற்றையும் எழுதியவற்றையும் தூக்கியெறியவேண்டியதில்லை. சாலமோனும், தாவீதும் பெரும் தவறுகள் செய்தி ருந்தாலும் அவர்கள் எழுதியவற்றைக் கடவுள் திருமறையில் பாதுகாத்து நமக்குத் தந்துள்ளார். ஏனெனில் அவை தூயாவியானவரின் உந்துதலால் எழுதப்பட்டவை. தலைவர்களுக்காய் ஜெபிப்பது நமது தலையாய கடன்.

*குருவைப்போலவே சீடன்!*